**Advt. No: 4**

**புதுச்சேரி அரசு**
**மாவட்டத் தொழில் மையம்**
**கோட்டுச்சேரி, காரைக்கால்**

**எண். B-16/4/2025-O/o FM DIC PDY** **காரைக்கால், நாள்**

**அறிக்கை**

**2025-2026 -ஆம் ஆண்டில் தென்னை நாரில் கயிறு மற்றும் மிதியடி தயாரிக்கும் தொழிலில் பயிற்சி பெறுவது / அளிப்பது தொடர்பாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

காரைக்கால், கோட்டுச்சேரி கிராமிய தொழிற்பேட்டை, மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் 2025-2026 ஆம் ஆண்டுக்கான தென்னை நாரில் கயிறு மற்றும் மிதியடி செய்யும் தொழிலில் பயிற்சி பெறுவதற்கு மற்றும் பயிற்சி அளிப்பதற்கு கீழ்க்கண்ட தகுதியுடைய ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்ப படிவங்கள் வரவேற்கப்படுகின்றன.

**அளிக்கப்படும் பயிற்சியின் விவரம்:**

தென்னை நாரில் கயிறு மற்றும் மிதியடி செய்தல்.

**பயிற்சி காலம்**

ஆறு(6) மாதங்கள்

**உதவித்தொகை:** Rs.4500/- per month

**தகுதிகள்: (பயிற்சி பெறுபவர்)**

- விண்ணப்பதாரர் காரைக்கால் மாவட்டத்தில் குறைந்தபட்சம் மூன்று (3) ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும்.
- வயது வரம்பு 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும்
- குறைந்தபட்சம் எழுத படிக்க தெரிந்தவராக இருக்க வேண்டும்.
- மத்திய மாநில அரசின் மூலம் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கக் கூடாது.

(தகுதிகளுக்கான சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்)

..2/-

**<u>தகுதிகள்:</u> (பயிற்சி அளிப்பவர்)**

- மேற்படி தொழிலில் பயிற்றுநர்கள் / தொழில் நிறுவனங்கள் குறைந்தபட்சம் 3 வருடங்களுக்கு தொடர்ந்து தொழில் நடத்தி வருபவர்களாகவும், சிறந்த அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும், மத்திய மாநில அரசுகளின் மூலம் அளித்த பயிற்சிக்காலம் இதில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.
- புதுச்சேரி பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
- பயிற்றுநர்களின் வயது வரம்பு குறைந்தது 25 வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்.
- தென்னை நாரில் கயிறு மற்றும் மிதியடி தயாரித்தலுக்கான உரிய தொழில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். (Udyam Registration Certificate)

(தகுதிக்கான சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படவேண்டும்)

**<u>குறிப்பு :</u>** பயிற்சிக்கான விண்ணப்பத்தை **edistrict.py.gov.in** என்ற இணையதளத்தின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்
விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி: 10.06.2025

மேலும் விபரங்களுக்கு / தொடர்புக்கு
தொலைபேசி : 04368 – 266467

**(கா. கோவிந்தராஜன்)**
**பொது மேலாளர்**
**மாவட்டத் தொழில் மையம்**
**புதுச்சேரி.**